05.07.2016.                    சி.சி.189/10

அ.சா.1 தமிழ்வாணன்   த-பெ. காஞ்சிவனம்.

மு.வி.

நான் மேலூர் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். சாட்சி குருவம்மாள் என் தாயார் ஆவார். கடந்த 14.03.10ம் தேதி இரவு சுமார் 9 மணிக்கு நான் நொண்டிக்கோவில்பட்டியிலுள்ள என் வீட்டில்மாடியில் நானும் என் மனைவியும் படுத்திருந்தோம். அப்பொழுது வீட்டின் கீழ்தளத்தில் இருந்து என்னுடைய அம்மாவின் சத்தம் நகையை அத்துக்கொண்டு போகிறார்கள் என்று சத்தம் கேட்டது, உடனே நானும் என் மனைவியும் கீழே வந்து பார்த்தபொழுது என் அம்மா ஒரு நபர் வீட்டிற்குள் வந்து தன் கழுத்தில் அணிந்திருந்த தாலிச்செயினை அத்துக்கொண்டு சென்றதாக சொன்னார். என் அப்பாவும் என் அம்மா அருகில் இருந்தார். வழக்கமாக என்னுடைய அப்பா முன் ரூமிலும், என் அம்மா அதற்கு அருகில் உள்ள 2வது ரூமிலும் தூங்குவார்கள். என் அப்பா அடிக்கடி சிறுநீர் கழிக்க செல்வதால் வீட்டின் ஒரு கதவை திறந்து வைத்துவிட்டு தூங்குவார்கள். மேலும் என் அம்மாவின் சத்தம்கேட்டு வீட்டின் அருகிலிருந்தவர்களும் வந்தார்கள். உடனே நாங்கள் அனைவரும் திருடியவரை தேடிப்பார்த்தோம் ஆனால் கண்டுபிடிக்கமுடியவில்லை. அதன்பிறகு மேலூர் காவல் நிலையம் வந்து அன்று இரவு 10.45 மணிக்கு நான் புகார் கொடுத்தேன். திருடுபோன என் அம்மாவின் தாலிச்செயின் 4 பவுன் ஆகும். அதன் அப்போதைய மதிப்பு ரூபாய் 30 ஆயிரமாகம். தற்போது என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் புகாரிலுள்ள கையொப்பமாகும். புகாரிலுள்ள சங்கதிகளை நான் கைப்பட எழுதினேன். புகார் அ.சா.ஆ. 1 ஆகும். பின்பு 3 நாட்கள் கழித்து 17ம் தேதி மேலூர் காவல் நிலைய போலீசார் என்னை அழைத்து நகையை கண்டுபிடித்திருப்பதாகவும் அது உங்கள் நகைதானா என்று அடையாளம் காட்டும்படியும் சொன்னார்கள். அதன்பேரில் நான் மேலூர் காவல் நிலையம் சென்று என் தாயாரின் தாலிச்செயினை அடையாளம் காட்டினேன். மேலும் போலீசார் அந்த செயினை திருடியவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 4 நபர்கள்தான் என்று காவல் நிலையத்திலிருந்த இவர்களை காண்பித்து போலீசார் சொன்னார்கள். பின்பு என்னுடைய தாயார் நீதிமன்றத்தில் மனுச்செய்து அந்த தாலிச்செயினை திரும்ப பெற்றுக்கொண்டார். அந்த தாலிச்செயின் தற்போது என் வீட்டில் உள்ளது. அதைப்பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள தாலிச்செயின்தான் அந்த தாலிச்செயினாகும். அந்த புகைப்படம் சா.பொ. 1 ஆகும். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். தற்போது என்னுடைய தாயார் குருவம்மாள், தந்தை காஞ்சிவனம் இருவரும் இறந்துவிட்டனர்.

கு.வி.: எதிரிகளுக்கு சாட்சியை கு.வி. செய்ய வாய்ப்பளித்தும் கு.வி. செய்யவில்லை.

05.07.2016. சி.சி.189/10

அ.சா.2 சுதா க-பெ. தமிழ்வாணன்.

மு.வி.

நான் மேலூர் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். இவ்வழக்கு புகார்தாரர் என் கணவர், சாட்சி குருவம்மாள், காஞ்சிவனம் ஆகியோர் முறையே என் மாமியார், மாமனார் ஆவார்கள். கடந்த 14.03.10ம் தேதி இரவு சுமார் 9 மணிக்கு நானும் என் கணவரும் வீட்டின் மாடியில் இருந்தோம். கீழ்தளத்தில் உள்ள முதல் ரூமில் என் மாமனாரும், 2வது ரூமில் என் மாமியாரும் இருந்தார்கள். அப்பொழுது என் மாமனார் என் கணவரின் பெயரைச்சொல்லி கூப்பிட்டு யாரோ ஒருவன் என் மாமியாரின் செயினை அத்துக்கொண்டு ஓடுவதாக கத்தினார். உடனே நானும் என் கணவரும் கீழே வந்து பார்த்தோம். அப்பொழுது என்னுடைய மாமனார் தெற்கு பக்கம் செயினை அத்த நபர் ஓடிவிட்டதாக கூறினார். பின்பு என் வீட்டருகிலிருந்தவர்களும், என் கணவரும் அக்கம்பக்கத்தில் தேடிப்பார்த்தும் செயின் அத்த நபரை கண்டுபிடிக்கமுடியவில்லை. அதற்கு பிறகு என் கணவர் அன்று இரவு சுமார் 10.45 மணிக்கு மேலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். திருட்டுப்போன என் மாமியாரின் தாலிச்செயினின் எடை 4 பவுனாகும். பிறகு 3 நாட்கள் கழித்து மேலூர் போலீசார் என் கணவருக்கு போன் செய்து திருட்டுப்போன தாலி செயினையும், திருடிய நபர்களையும் பிடித்திருப்பதாக தகவல் சொன்னார்கள்.அதன்பேரில் என் கணவர் காவல் நிலையம் சென்று திருட்டுப்போன தாலிச்செயினை அடையாளம் காட்டினார். பின்பு என் மாமியார் நீதிமன்றத்தில் மனு செய்து அந்த தாலிச்செயினை திரும்ப பெற்றுக்கொண்டார். அந்த தாலிச்செயின் தற்போது வீட்டில் உள்ளது. அதனை பார்த்ததல் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 புகைப்படத்திலுள்ள தாலிச்செயின்தான் அந்த செயினாகும். போலீசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தனர்.

கு.வி.: எதிரிகளுக்கு சாட்சியை கு.வி. செய்ய வாய்ப்பளித்தும் கு.வி. செய்யவில்லை.

21.04.2017 . சி.சி.189/10

அ.சா.3 சுப்பையா த-பெ. சுப்பையா அம்பலம்..

மு.வி.

நான் மேலூர் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன். நான் டெய்லராக இருக்கிறேன். தமிழ்வாணன், குருவம்மாள், காஞ்சிவனம், சுதா, பாண்டி ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 2010ம் வருடம் 03வது மாதம் ஒருநாள் இரவு சுமார் 09 மணியளவில் எனது வீட்டிலிருந்து 03 அல்லது 04 வீடுகள் தள்ளி உள்ள வீட்டில் வசிக்கும் எனது பெரியப்பா காஞ்சிவனம் "ஓடி வா்ங்கப்பா சங்கிலியை அத்துக்கொண்டு ஓடுராங்க" என்று சத்தம்போட்டார். உடனே நானும், அருகிலிருந்தவா்களும் ஓடிச்சென்று பார்த்தபொழுது தெற்குப்பக்கம் திருடா்கள் ஓடுவதாக சொன்னதன்பேரில் நானும், சுதா, பாண்டி, தமிழ்வாணன் ஆகியோா் தேடிப்பார்த்தோம். ஆனால் திருடா்களை கண்டுபிடிக்க முடியவில்லை. எனது பெரியப்பா காஞ்சிவனமும், பெரியம்மா குருவம்மாளும் வீட்டின் கீழ்தளத்திலும், எனது பெரியப்பா காஞ்சிவனத்தின் மகன் தமிழ்வாணன், அவருடைய மனைவி சுதா ஆகியோா் முதல் தளத்திலும் வசிக்கிறாா்கள். சம்பவ தினத்தன்று எனது பெரியப்பா அடிக்கடி சிறுநீா் கழிக்க செல்லவேண்டியிருப்பதால் கதவை தாழ்போடாமல் சாத்திவிட்டு ஹாலிலும், பெரியம்மா அருகிலுள்ள அறையிலும் படுத்து உறங்கிக்கொண்டிருந்தபொழுது இரவு சுமாா் 09 மணியளவில் மூன்று நபா்கள் வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டும், ஒருநபா் வீட்டிற்குள் வந்து உறங்கிக்கொண்டிருந்த எனது பெரியம்மாவின் 04 பவுன் செயினை அத்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும் எனது பெரியப்பாவும், பெரியம்மாவும் என்னிடம் சொன்னாா்கள். பின்பு எனது அண்ணன தமிழ்வாணன் காவல்நிலையத்தில் புகாா் கொடுத்தாா். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசாா் என்னை விசாரித்தனா்.

கு.வி.:

புகாா்தாரா் தமிழ்வாணன் எனது உறவினா். இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டவா்கள் யாா் என்று எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், புகாா்தாரா் எனது உறவினா் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

21.04.2017 . சி.சி.189/10

அ.சா.4 பாரதி த-பெ. காஞ்சிவனம்.

மு.வி.

நான் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன். விவசாயம் மற்றும் டீ கடை தொழில் செய்கிறேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள (பார்வை மகஜர்) கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 14.03.10ம் தேதி இரவு சுமார் 11.30 மணியளவில் எனது வீட்டிலிருந்தபொழுது அருகிலுள்ள எனது அப்பா காஞ்சிவனத்தின் வீட்டில் எனது அம்மாவின் செயினை அத்துச்சென்றது சம்மந்தமாக விசாரிக்க வந்த மேலூர் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து அதுபற்றிய விவரத்தை மற்றொரு தாளில் எழுதி என்னிடமும், என் தம்பி மகன் நவீன்குாரிடமும் சாட்சிகளாக கையொப்பம் வாங்கினார்கள். அந்த கையொப்பம்தான் மேற்கண்ட கையொப்பமாகும். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

கு.வி.

புகார்தாரர் எனது உடன்பிறந்த தம்பி. நான் எழுதிய பேப்பரில்தான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த பேப்பரில் படம் வரைந்த விவரம் பற்றி எழுதியிருந்தது. நான் மேற்கண்ட கையொப்பத்தினை காவல்நிலையத்தில் வைத்து செய்தேன் என்றாலும், புகார்தாரர் எனது தம்பி என்பதால் அவர் கேட்டக்கொண்டதற்கிணங்க சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.189 / 2010

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Naveenkumar | Father/Husband Name | : Ganesan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 20.08.2018. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் நொண்டி கோவில்பட்டியில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். 14.03.2010ம் தேதி இரவு 11.30 மணியளவில் என் வீட்டு முன்பாக போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் நானும்எனது பெரியப்பா பாரதி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சாட்சி தமிழ்வாணன் எனக்கு தெரிந்தவர் ஊர்காரர் எனக்கு உறவினர். சாட்சி தமிழ்வாணன் எனக்கு உறவினர் என்பதால் நான் எழுதாத வெள்ளை தாளில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.189 / 2010

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Saitbabu | Father/Husband Name | : Anifa |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 20.08.2018. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் மேலூரில் வசிக்கிறேன். கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வில் இருக்கிறேன். கடந்த 2010ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை கருத்தபுளியம்பட்டியில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது 16.03.2010ம் தேதி மாலை சுமார் 4 அல்லது 4.30 மணியளவில் மேலூர் காவல் நிலையத்திலிருந்து அழைத்ததின் பேரில் மேலூர் காவல் நிலையம் சென்று ஒரு திருடு வழக்கு சம்மந்தமாக காட்டு ராஜா மற்றும் 3 நபர்களை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்து கொண்டிருந்தார். 14.03.2010ம் தேதி நொண்டி கோவில்பட்டியில் நடந்த திருட்டு சம்பவம் சம்மந்தமாக விசாரணை நடந்து கொண்டிருந்தது. ஆய்வாளர் விசாரணை செய்த போது நானும் தலையாரியும் உடன் இருந்தோம். ஒரு மூதாட்டியிடம் 4 பவுன் சங்கிலியை பறித்ததாக விசாரணையில் தெரிய வந்தது. எதிரி காட்டுராஜா என்பவர் அரிட்டாபட்டியில் உள்ள தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த 4 பவுன் செயினை தன்னுடன் வந்தால் எடுத்து தருவதாக கூறினார். இரவு 1 மணியிலிருந்து 2 மணிக்குள் காவல் ஆய்வாளருடன் நான் அரிட்டாபட்டி சென்று எதிரி காட்டுராஜா எடுத்துக்கொடுத்த 4 பவுன் செயினை காவல் ஆய்வாளர் பெற்று கொண்டார். வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்தேன். அத்தாட்சி மற்றும் நான்கு ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பங்கள் என்னுடையது தான். எதிரி காட்டுராஜா கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆகும். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்

குறுக்கு விசாரணை

சந்தர்ப்பம் அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை

குசழஅ-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.189 / 2010

Deposition of witness for: PW - 7

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Arumugam | Father/Husband Name | : | Raman |
| Caste | : | Calling | : | |
| Religion | : | Age | : | |
| Date | : 20.08.2018. | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் நொண்டிகோவில்பட்டியில் வசிக்கிறேன். பூஞ்சுட்டி கிராம உதவியாளராக பணிபுரிகிறேன். அ.சா.6ஐ தெரியும். 16.03.2010ம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு மேலூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் நானும் அ.சா.6ம் பணியில் இருந்த போது மேலூர் காவல் நிலையத்தில் இருந்து வந்த அழைப்பின் பேரில் காவல் நிலையம் சென்றோம். எதிரி காட்டு ராஜா ராஜேஷ் முருகன் வீரணன் என்கிற கவாஸ்கர் ஆகிய 4 பேர்களையும் போலீசார் தனித்தனியாக விசாரித்து 4 ஒப்புதல் வாக்குமூலங்களில் சாட்சியாக கையெழுத்து கேட்டதின் பேரில் நான் கையெழுத்து செய்தேன். ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. பின்னர் போலீசாருடன் அரிட்டாபட்டிசென்று எதிரி காட்டுராஜா என்பவர் போலீசாருடன் ஒப்படைத்த 4 பவுன் செயினை போலீசார் பெற்றுக் கொண்டு தயார் செய்து அந்த அத்தாட்சியலுள்ள 2வது கையெழுத்து என்னுடையது. போலீசார் என்னை விசாரித்தார்கள்

குறுக்கு விசாரணை

சந்தர்ப்பம் அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை